**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 247/2019 |
| Name | : Thangaraj |
| P.W. | : 2 |
| Father Name | : Periyasamy |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.01.2026**

**எதிரிகள் 1 முதல் 3 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கணேசபுரத்தில் வசிக்கிறேன். தேங்காய் சுமக்கும் வேலைக்கு செல்கிறேன். 29.05.2019 ம் தேதி காலை 12.00 மணியளவில் கொமரலிங்கம் மெயின் ரோடு கணேசபுரம் ரயில்வே கேட் அருகில் நானும், எனது நண்பர் கருப்புச்சாமியும் நின்று பேசிக் கொண்டிருந்தோம் அப்போது போலீசார் பைக் திருட்டு சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் கருப்புச்சாமி கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய எதிரிகள் வழக்கறிஞர் ஆஜரில்லை**

**என்பதால் நீதிமன்றத்தால் amicus curiae திரு.கே.கார்த்திக் நியமிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது.**

(1) கணேசபுரத்தில் நான் பிறந்ததில் இருந்து குடியிருந்து வருகிறேன். முதலில் பேப்பர் மில்லிற்கு சென்று வந்தேன் தற்போது தேங்காய் சுமக்கும் கூலி வேலை செய்து வருகிறேன். போலீசார் சம்பவ இடத்தில் விசாரிக்கும் போது சுமார் 6–7 நபர்கள் அங்கு இருந்தோம். போலீசார் அங்கு வேறு யாரையாவது விசாரித்தார்களா என்றால் பார்க்கவில்லை. நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று தெரியாது. நான் சம்பவ இடத்தில் வைத்து கையெழுத்து செய்யாமல் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.21 14:46:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்